2014 ஜூலை 16] [திரு. ஏ.கே. போஸ்]

செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, வைரவிழா கண்ட தமிழக சட்ட மன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராக எனக்கு வாய்ப்பளித்தமைக்கு, கருணையுள்ளம் கொண்ட தாயின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் 97 முதல் 103 வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்திய அரசியல் வரலாற்றில் கூட்டணியில்லாமல் தேர்தலில் நிற்கமுடியாது என்ற நிலையை 1959-ல் கேரளாவிலே அன்றைய அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி திருமதி இந்திரா காந்தி அவர்கள் முதன்முதலில் உருவாக்கினார்கள். அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சி நடத்திய கேரளாவில் நம்பூதிரிபாட் அவர்களை வீழ்த்துவதற்கு காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்தது. அதற்குப் பின்னால், 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதற்கு இராஜாஜியை உள்ளடக்கி கூட்டணியை அமைத்தார்கள். இந்த 41 ஆண்டுகளில், பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் தனியாக கட்சிகள் நிற்கமுடியாது என்ற நிலை நிலவி வந்தது. அந்தக் கூட்டணி தர்மத்தை மாற்றி 2014-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தன்னந்தனியாக நின்று (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெறமுடியுமென்று இந்தியாவுக்கு வழிகாட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். சின்னசாமி] [2014 ஜுலை 16

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

6. மானியக் கோரிக்கைகள், 2014-2015 விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

(ஆ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

. . .

(அ) கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

"நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,789,07,42,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,999,95,32,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.150,00,01,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 375, திரு. எம். ஆறுமுகம்.